


# Tamil language and culture on American archaeology web channel

***The Archaeology Channel*** (www.archaeologychannel.org), a non-profit, streaming media channel for archaeology-related content, founded by the Archaeological Legacy Institute (ALI), Eugene, Oregon, USA, is webcasting **UR - A Video Essay on Tamil** Part 1, produced and directed by M. V. Bhaskar and co-directed by K. T. Gandhirajan.

On the first day that UR went online - June 19, 2006 - it drew 8639 visitors according to Mr. Richard D. Pettigrew, the founder of ALI. The second day had 9942 hits. "While the video has been attracting an approximate average of 10000 visitors daily, Indian visitors rank #10 among all those coming to the page. Why?" wonders Dr. Pettigrew.

For one month, the video can be accessed on the home page of ***The Archaeology Channel***, after which it moves to http://www.archaeologychannel.org/content/video/ur.html.

The page is sponsored by the Indian IT major HCL. Originally produced at the instance of Dr. E. Annamalai, former Director, Central Institute of Indian Languages and now Visiting Professor Emeritus, Yale, the 26 m video tracks - through music and images, and archaeology and literary history - the first 800 years of the known history of Tamil.

'Semmoothai' - a play staged on the red palai dunes of Terikkadu in southern Ramanathapuram by Dr. Murugaboopathy and his theatre group Manal Magudi invokes UR.

Antediluvean myth, the art of interpretation (tinai), epochs of poetry, Brahmi caves, Asokan Brahmi, Vatteluttu, Grantham, modern Tamil script, ancient petroglyphs, Indus script, Jaina influence and medieval Hinduism are the broad themes explored.

There are performances in the video, each good enough to stand on its own without the rest of the video - an Amba or Temmangu style rendition of Silappadikaram by Poompuhar Sellakkunju at the confluence of Kaveri and Bay of Bengal, Silappadikaram in classical dance ballet by Sreelatha Vinod, a 'numerical' prayer by the devotees of Mel Sittamur Jinalayam, Tirumurai by Tiruppanantal Tyagaraja Oduvar and instrumental performances (Bugiri, Kuval) by Karikkiyur Irulas.

The video is a "successful conversion of a verbal and emotive content into a captivating visual and aural content", says E. Annamalai. Pettigrew adds: The production looks very good. The subject matter is one that is poorly understood in many parts of the world, especially the West, so it has special value. The images and sound are excellent and the research quite well done, although I myself am not an expert on Dravidian culture.

A limited number of DVD / tape copies will be available early August for educational and cultural purposes - for use in public exhibitions, festival / conference screenings, broadcast, libraries, government archives.

Contact:
mv bhaskar
91-44-24451594
093805-60921

content@hathway.com
mvbhaskar@mac.com

# அமெரிக்க தொல்பொருள் இணைதளத்தில் தமிழ் மொழியும் கலாச்சாரமும்

ஊர் - தமிழ் பற்றிய ஒரு வீடியோ கட்டுரை, பாகம் 1 - 26 நி. இப்பொழுது அமெரிக்காவில் யூஜீன், ஒரிகான் மாநிலத்தில் உள்ள லாப நோக்கம் அற்ற ஒரு தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனம் 'ஆர்க்கியாலஜிகல் லெகசி இன்ஸ்டிடியூட்' செயலாக்கும் 'ஆர்க்கியாலஜி சேனல்' (www.archaeologychannel.org) எனும் இணைதளத்தில் ( வெப்சைட்) காணப்படுகிறது.

எம். வி. பாஸ்கர் தயாரித்து, கே. டி. காந்திராஜனுடன் இணையாக இயக்கிய ஊர் வீடியோவை முதல் நாள் (ஜூன் 19, 2006) 8639 பேரும், இரண்டாம் நாள் 9942 பேரும் கண்டதாக சேனலின் நிறுவனர் டாக்டர் ரிச்சார்ட் பெட்டிக்ரூ கூறுகிறார். "தினசரி சுமார் பத்தாயிரம் பேர் வருகையில், வருகையாளர் பதிவில் இந்தியா 10ம் இடத்தில் பின் தங்கியுள்ளது. ஏன்?" என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளார் பேராசிரியர் பெட்டிக்ரூ.

ஜூலை 18 வரை இந்த வீடியோவை ஆர்க்கியலஜி சேனலின் முன்பக்கத்திலும், அதன் பிறகு இணைதளத்தின் உள்பக்கத்திலும் (http://www.archaeologychannel.org/content/video/ur.html) காணலாம். இந்த பக்கத்திற்கு இந்தியாவின் ஐ.டி. நிறுவனமான ஹெச். சி. எல் (HCL) நிதி உதவி அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இது போன்ற ஒரு வீடியோவை உருவாக்க வேண்டும் என்ற அவசியத்தை டாக்டர் ஈ. அண்ணாமலை (முன்னாள் இயக்குனர், செண்ட்ரல் இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தியன் லேங்குவேஜஸ்; தற்கால விசிடிங் புரொஃபெசர் எமெரிடஸ், யேல் யுனிவர்சிடி, அமெரிக்கா) எடுத்துக் கூறியதின் மூலம் தயாரிக்கப்பட்டது ஊர்.

இயல், இசை நாடகம், மேலும் தொல்பொருளியல் ம்ற்றும் இலக்கிய வரலாற்று அம்சங்களை உட்கொண்டு, தமிழின் அறிந்த சரித்திரத்தை, அதன் முதல் 800 வருடங்களை, அறிமுக பூர்வமாக வர்ணிக்கிறது ஊர்.

செம்மூதாய் - தென் ராமநாதபுரத்தின் தேரிக்காட்டு செம்மணற் குவியல்களுக்கு இடையில், டாக்டர் முருகபூபதியும் அவரது மணல் மகுடி நாடகக் குழுவினரும் அரங்கேற்றிய ஒரு நாடகம் - இந்தக் கட்டுரையின் முன் உரை, முதல் ஓசை.

இழந்த காண்டம், அழிந்த நகரம், இவை தாண்டிய பண்டைத் தமிழகம், திணைக் கோட்பாடு, இலக்கிய சகாப்தங்கள், தமிழ் பிராமி, அசோக பிராமி, வட்டெழுத்து, கிரந்தம், நவீன லிபி, சிந்து லிபி, சமணத் தொடர்பு மற்றும் இந்துத்துவத்தின் தொடக்க காலம், இந்த வீடியோவின் சில அம்சங்கள்.

காவேரி சங்கமத்தில் பூம்புகார் செல்லக்குஞ்சு அம்பா முறையில் பாடியிருக்கும் சிலப்பதிகாரம், இப்பெருங்காப்பியத்தை பரத நாட்டிய பாணியில் வழங்கும் ஸ்ரீலதா வினோத், மேல் சித்தாமூர் ஜீனாலயத்தில் சமணத்தாய்களின் கணிதம் தோய்ந்த நாமாவளி வழிபாடு, திருப்பனந்தாள் தியாகராஜ ஓதுவாரின் திருமுறை, கரிக்கியூர் இருளரின் புகிரி மற்றும் குவாள் இசை - இவை இந்த வீடியோவின் மற்ற பகுதிகள் இல்லா விட்டாலும் கூட, தனித்து ரசிக்கக் கூடியவை.

"சொல்லிலும் உணர்விலும் ஆழ்ந்த கருத்துகளை, இசை மற்றும் பிம்ப வடிவங்களில் ஈர்க்கும் வகையில் பதிவாக்குகிறது ஊர்" என்கிறார், பேராசிரியர் அண்ணாமலை. "அருமையான தயாரிப்பு. இது உலக அளவில், குறிப்பாக மேல் நாடுகளில், பெரும்பாலோர் அறியாத விஷயம் என்ற காரணத்தால், இந்த வீடியோவின் மதிப்பு மேலும் அதிகம். நான் திராவிட இயல் நிபுணர் இல்லை, ஆனாலும் இதன் பின்னணி ஆராய்ச்சியின் ஆழ்மையை உணர முடிகிறது" என்று எடுத்துச் சொல்லியுள்ளார் டாக்டர் பெட்டிக்ரூ.

ஆகஸ்ட் மாதத் தொடக்கத்தில் ஊர் வீடியோவின் டிவிடி (DVD) நகல், கல்வி ம்ற்றும் கலாச்சர சம்மந்த உபயோகங்களுக்கு (கருத்தரங்கக் காட்சிகள், பள்ளி ம்ற்றும் கல்லூரி நூலகங்கள், அரசு இலாக்கா ஆவணங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், ஆகியவைக்கு) தமிழிலும் ஆங்கிலத்திலும், அணுகுவோர்க்கு, இயன்ற வரை விநியோகம் செய்யப்படும்.

எம். வி. பாஸ்கர்
91-44-24451594
093805-60921

content@hathway.com
mvbhaskar@mac.com